# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8074766

C

1. District : திருச்சிராப்பள்ளி PS: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு Year: 2021 FIR No.: 08/2021 Date: 29.11.2021
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of corruption Act 1988 Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(e)
(ii) Act சட்டம்: IPC Sections பிரிவுகள்: 109
(iii) Act சட்டம்: Prevention of corruption Act 1988 (as amended in 2018) Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(e) of PC Act 1988 and 13(2) r/w 13(1)(b) of PC Act 1988 (as amended in 2018) r/w 12
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 01.01.2014 Date to : 15.09.2021
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 29.11.2021 Time : 1600 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல்
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: திருச்சி, கன்டோன்மெண்ட், சென்னை சுமார் 350 கி.மீ
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : – (b) Address : –
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : – District : –
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : இரா. மணிகண்டன் (b) Father's/ Husband's Name : இராமன்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 20.06.1972 (d) Nationality : இந்தியன் (e) Passport No. : –
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : – Place of Issue : –
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : காவல் துணை கண்காணிப்பாளர் (g) Address : ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருச்சி
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) திருமதி. டி. பவானி, வயது 57/2021 க/பெ (லேட்) இராஜசேகரன், தொழிற்சாலைகள் உதவி இயக்குநர், மன்னார்குடி (TK), திருவாரூர் மாவட்டம்,
2) C. ஜெயசந்திரன், த/பெ (லேட்) சந்திரசேகரன், பிளாட் நெ.5, 2வது கிராஸ், சீதாநகர், சிந்தாமணி ரோடு, கிராப்பட், திருச்சி-6

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

முன் அனுமதி பெற்று பதிவு செய்யப்படுகிறது.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் P. [illegible] பதவி [illegible] நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

29/11/21

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
29.11.2021

Name: பெயர் சு. மணிவண்ணன்,
Rank: நிலை காவல் [illegible]
[illegible],
[illegible]

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

**திருச்சி ஊ.த.க பிரிவு கு.எண்.08/2021 முதல் தகவல் அறிக்கை காலம் எண்.12**

**கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.**

சேகரித்த ரகசிய தகவலின் அடிப்படையில், விசாரணை மேற்கொண்டதில், எதிரி திருமதி.C.பவானி என்பவர், வருவாய்த்துறையில் 2006-ம் ஆண்டு உதவியாளராக பணியில் சேர்ந்து படிப்படியாக துணைதாசில்தார், தாசில்தாராக பதவி உயர்வு பெற்று திருச்சி மாவட்டத்தில் பணிபுரிந்து தற்போது தனி ஆட்சியர், வருவாய் நீதிமன்றம், திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் பணிபுரிந்து வருகிறார். வருவாய்த்துறையில் இவர் பணியாற்றிய கடந்த 7 ஆண்டுகள் 9 மாதங்களில் மட்டும், தனது வருமானத்திற்கு அதிகமாக கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பிற்கு அசையும் மற்றும் அசையா சொத்துக்களை, தனது கணவர் மற்றும் மகன் பெயரில் வாங்கி சேர்த்துள்ளார். மேற்படி எதிரி ஊழல் தடுப்பு சட்டம் 1988 பிரிவு 2(c)-ன் படி பொது ஊழியர் ஆவார்.

இவரது பூர்வீகம் திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டமாகும். இவரது தாய் தந்தையர் நடுத்தர வர்க்கத்தினரைச் சார்ந்தவர்கள். இவரது முதல் கணவர் திரு.சந்திரசேகரன். இவர்களுக்கு ஹர்ஷவர்த்தன் என்ற ஒரு மகன் உள்ளார். எதிரி வருவாய்த்துறையில் பணியில் சேருவதற்கு முன்பே திரு.சந்திரசேகரன், இறந்துவிட்டார். அதற்கு பிறகு எதிரி, திரு.ராதாகிருஷ்ணன் என்பவரை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டுள்ளார். இவர்களுக்கு ரிஷிவர்த்தன் என்ற ஒரு மகன் உள்ளார். திரு.ராதாகிருஷ்ணன் கடந்த 2020-ம் ஆண்டு இறந்துவிட்டார். எதிரி திருமதி.C.பவானியின் முதல் கணவர் திரு.சந்திரசேகர் மற்றும் இரண்டாவது கணவர் திரு.ராதாகிருஷ்ணன் இருவருமே அரசு அல்லது தனியார் நிறுவனங்களில் வேலை செய்து மாதாந்திர சம்பளமோ அல்லது சொந்தமாக வேறு தொழில் எதுவும் செய்து அதன் மூலம் வருமானம் எதுவுமோ அல்லது பூர்வீக சொத்துக்களோ எதுவும் இல்லை. எதிரி திருமதி.C.பவானிக்கு அவரது மாதாந்திர சம்பளத்தைத் தவிர வேறு எந்தவித வருமானமும் இல்லை எனவும் தெரியவருகிறது. குறிப்பாக இவரது குடும்ப உறுப்பினர்கள் மூலமாக எந்தவித வருமானமும் எதிரிக்கு கிடைக்கப் பெறவில்லை. இந்நிலையில் எதிரி திருமதி.பவானி, தன் சொந்த பராமரிப்பில் மூத்த மகன் ஹர்ஷவர்த்தனை பொறியியல் பட்டம் படிக்க வைத்து தொழில்களும் துவக்கி கொடுத்துள்ளார். இளைய மகன் ரிஷிவர்த்தனை தற்போது படிக்க வைத்து வருகிறார் என விசாரணையில் தெரிய வருகிறது.

எதிரி திருமதி.பவானி 2014 முதல் 2021 வரையிலான குறியீட்டு காலத்தில் அவருடைய கணவன் மற்றும் மகன்கள் பெயர்களில் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் வாங்கி வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்துள்ளார் என்பது ரகசிய தகவலின் அடிப்படையில் தெரியவருகிறது.

(1) 2014 ஆம் ஆண்டுக்கு முன்பாக எதிரி திருமதி.பவானி அவரது பெயரிலும், அவருடைய மகன் பெயரில் மதிப்பிடப்படாத இரண்டு பூர்வீக சொத்துக்கள் மட்டும் இருந்துள்ளது.

(2) 2021 ஆம் ஆண்டு வரை எதிரி திருமதி.பவானி அவரது கணவர் மற்றும் மகன்கள் பெயர்களில் வீட்டு காலி மனைகள், கல்வி நிறுவனம், பெட்ரோல் பங்க்குகள், வாகனங்கள் வாங்கி சேர்த்துள்ள சொத்துக்களின் தோராய மொத்த மதிப்பு ரூ. 6,08,07,282/- ஆகும்.

(3) எதிரி திருமதி.பவானி 2014 முதல் 2021 வரையிலான குறியீட்டு காலத்தில் அவருக்கு கிடைக்கப் பெற்ற மாதாந்திர சம்பளம், பெட்ரோல் பங்குகளின் மூலம் வருமானம் மற்றும் கல்வி நிறுவனத்தின்மூலம் கிடைக்கப் பெற்ற வருமானம் ஆகியவைகளின் தோராய மொத்த மதிப்பு ரூ.1,64,75,000/- ஆகும்.

(4) எதிரி திருமதி.பவானி 2014 முதல் 2021 வரையிலான குறியீட்டு காலத்தில் அவருக்கும் அவரது குடும்ப உறுப்பினர்களின் நுகர்வோர் செலவு, நிலங்கள் கிரையம் பெற்ற பத்திர செலவு, வாகன உபயோகத்திற்கான எரிபொருள் மற்றும் பராமரிப்பு செலவு மற்றும் மாநகராட்சியில் கட்டிட அனுமதி பெற செலுத்திய செலவு ஆகியவைகளின் தோராய மொத்த செலவுகள் ரூ.61,32,750/- ஆகும்.

**அட்டவணை-1**

01.01.2014 அன்று எதிரியின் தோராய மொத்த சொத்து மதிப்பு ரூ. ---

**அட்டவணை-2**

15.09.2021 அன்று எதிரியின் தோராய மொத்த சொத்து மதிப்பு ரூ. **6,08,07,282**

**அட்டவணை-3**

01.01.2014 முதல் 15.09.2021 வரையிலான காலத்தில் எதிரிக்கு கிடைத்துள்ள மொத்த வருமானங்கள் தோராயமாக ரூ. **1,64,75,000**

**அட்டவணை-4**

01.01.2014 முதல் 15.09.2021 வரையிலான காலத்தில் எதிரி செய்துள்ள தோராய மொத்த செலவுகள் ரூ. **61,32,750**

**அட்டவணை-5**

| | |
|---|---|
| 15.09.2021 அன்று எதிரியின் தோராய மொத்த சொத்து மதிப்பு (அட்டவணை-2) | ரூ. **6,08,07,282** |
| 01.01.2014 அன்று எதிரியின் தோராய மொத்த சொத்து மதிப்பு (அட்டவணை-1) | ரூ. ----- |
| மேற்படி 7 ஆண்டுகள் 9 மாத காலத்தில் எதிரி சேர்த்துள்ள மொத்த சொத்துக்களின் தோராய மதிப்பு | ரூ. **6,08,07,282** |

## அட்டவணை-6

| | |
|---|---|
| 01.01.2014 முதல் 15.09.2021 வரையிலான காலத்தில் எதிரிக்கு கிடைத்துள்ள மொத்த வருமானங்கள் தோராயமாக (அட்டவணை-3) | ரூ. **1,64,75,000** |
| 01.01.2014 முதல் 15.09.2021 வரையிலான காலத்தில் எதிரி செய்துள்ள தோராய மொத்த செலவுகள் (அட்டவணை-4) | ரூ. **61,32,750** |
| மேற்படி 7 ஆண்டுகள் 9 மாத காலத்தில் எதிரி சேர்த்துள்ள மொத்த சேமிப்பு தோராயமாக | ரூ. **1,03,42,250** |

## அட்டவணை-7

| | |
|---|---|
| 01.01.2014 முதல் 15.09.2021 வரையிலான காலத்தில் எதிரி சேர்த்துள்ள மொத்த சொத்துக்களின் மதிப்பு தோராயமாக (அட்டவணை-5) | ரூ. **6,08,07,282** |
| 01.01.2014 முதல் 15.09.2021 வரையிலான காலத்தில் எதிரி சேர்த்துள்ள மொத்த சேமிப்பு தோராயமாக (அட்டவணை-6) | ரூ. **1,03,42,250** |
| எதிரி தனது வருமானத்திற்கு அதிகமாக சேர்த்துள்ள மொத்த சொத்துக்களின் மதிப்பு (306 %) | ரூ. **5,04,65,032** |

**எதிரி திருமதி.பவானி குற்ற நிகழ்வு காலத்தில் அவரது வருமானத்திற்கு அதிகமாக சேர்த்த சொத்துக்கள் மதிப்பின் சதவீதம்**

$$\frac{5,04,65,032}{1,64,75,000} \times 100 = 306\ \%$$

எதிரி திருமதி.பவானி, அவரது கணவர் மற்றும் மகன்கள் ஹர்ஷவர்த்தன் மற்றும் ரிஷிவர்த்தன் பெயர்களில் 2014 முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலான குறியீட்டு காலத்தில் சட்டத்திற்கு புறம்பாகவும், தனது வருமானத்திற்கு அதிகமாகவும் ரூ.**5,04,65,032**/-க்கு அசையும் மற்றும் அசையா சொத்துக்களை வாங்கியுள்ளார்.

பொது ஊழியரான எதிரி திருமதி.பவானி தனி ஆட்சியர், வருவாய் நீதிமன்றம், மன்னார்குடி தாலுக்கா, திருவாரூர் மாவட்டம் என்பவரின் மேற்படி குற்றமுறு கெட்ட நடத்தை செய்கையானது ஊழல் தடுப்புச் சட்டம் 13(2) r/w 13(1) (e) of PC Act-1988 மற்றும் 13(2) r/w 13(1)(b) of PC Act-1988 as amended in 2018 இ.த.ச.-ன்படி தண்டனைக் குரிய குற்றமாகும்.

ஆகையால், எதிரி திருமதி.பவானி, தனி ஆட்சியர், வருவாய் நீதிமன்றம், மன்னார்குடி தாலுக்கா, திருவாரூர் மாவட்டம் மற்றும் அவரது அவரது மூத்த மகன் ஹர்ஷவர்த்தன் த/பெ சந்திரசேகரன் ஆகியோர் மீது திருச்சி, ஊ.த.க. பிரிவு குற்ற எண்.8/2018, சட்டப்பிரிவு 13(2) r/w 13(1) (e) of PC Act-1988 மற்றும் 109 IPC r/w 13(2) r/w 13(1)(e) of PC Act-1988 மற்றும் 13(2) r/w 13(1)(b) of PC Act-1988 as amended in 2018 r/w 12 r/w 13(2), r/w

13(1)(b) இ.த.ச.-ன்படி இன்று 29.11.2021-ஆம் தேதி 16.00 மணிக்கு குற்ற வழக்கு பதிவு செய்யப்படுகிறது.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை அசல் கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சி அவர்களுக்கும், முதல் தகவல் அறிக்கையின் நகல் காவல் கண்காணிப்பாளர், தென்சரகம், ஊ.த.க. துறை, சென்னை அவர்களுக்கு, வழக்கு புலன் விசாரணை செய்ய உரிய அதிகார அனுமதி வழங்குவதற்காகவும் அனுப்பி வைக்கப்பட்டது. மற்றொரு நகல் வழக்கின் கோப்பிலும் வைக்கப்பட்டது.

29/11/2021

(G. MANIKANDAN)

DSP. V&AC.

TRICHY.